ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

இவ்வுலகில் நாம் செய்யவேண்டியது என்ன? என்று பெருங்கூட்டத்தில் கேள்விகேட்டால் பிராசீன சம்பிரதாயப்படி நடப்பவர்கள் கூறுவது வேறு. தற்கால நாகரீகப்படி நடப்பவர்கள் கூறுவதுவேறு. பெரியோர்களைப்பணிந்து அவர் சொற்படி நடக்கவேண்டியதே நாம் செய்யவேண்டிய காரியமென்பர் பிராசீன பழக்கமுள்ளவர். தற்காலத்தியவர்களோ பிராமணர்களை நசுக்கி வர்ணாசிரம தர்மத்தையழித்துச் சண்டாளர்களைத் தூக்கிவிடுவதே நாம்செய்யவேண்டிய கார்யமென்பர். இரண்டு பேர்களுக்கும் உலக க்ஷேமத்திலேயே முக்கியநோக்கம். எவர் சொல்லுவது யுக்தமென்று விவேகிகள் ஆராய்ந்து அனுஷ்டிக்கவேண்டும்.

அநேகம் பொத்தலுள்ள குடத்தில் நிரம்ப நீர்கொண்டுவரமுடியாது. அநேக ஓட்டையுள்ள ஓடத்தில் அந்தத் துவாரங்களின் வழியே ஜலம் உள்ளே செல்லுகையில் அதிலேறி ஆற்றைத்தாண்டி அக்கரைபோகமுடியாது. இதுபோல் அநேக இந்திரியத் துவாரங்கள் வழியாக வெளிநோக்கமுடைய மனதில் தியானம், ஞானம் நிலைபெறச்செய்யமுடியாது. அந்த இந்திரியங்கள் வழியாக விஷயங்கள் உள்ளேசென்றுகொண்டிருக்கையில் ஸம்ஸாரக்கடலைக்கடந்து அக்கரையான வீடு அடையமுடியாது. ஆகவே இந்திரியங்கள் வழியாக மனம் வெளிப்படவும், விஷயங்கள் உட்செல்லவும் பார்த்திருப்பவன் நற்கதி பெறமுடியாது. அதனால் இந்திரிய நிக்ரஹம் செய்யவேண்டியதவசியம்.

கல் தச்சன் ஒருவன் உளிமுதலிய ஸாதனங்களால் கல்லைவெட்டி வியாபாரம்செய்து ஜீவனம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஒருநாள் மலையைப் பேர்க்கையில் அதினுள்ளே தேரையென்றும் தவக்களைபோன்ற ஒரு பிராணி இருக்கக்கண்டு, இது குஞ்சாயிருந்து இவ்வளவு பெருத்து ஆகிறவரை இதற்குத் தீனியிட்டு வளர்த்தவர்யார், தீனிவரவழியெங்கேயென நீண்டநேரம் ஆலோசித்தும் ஒன்றும் விளங்காமல் ஒரு பெரியவரைக்கேட்டான். உனக்கு கர்ப்பத்தினுள் அன்னமூட்டிவளர்த்தவரே இந்தப்பிராணியையும் வளர்த்தார். அதற்குத் தீனியையளிக்க அவருக்கு வேறுவழி வேண்டாம். இருந்தவிடத்திலேயே உருதியாயிருந்தால் எப்படியாவது கொண்டுவந்து கொடுத்திடுவார் என்றார் பெரியவர். இதைக்கேட்ட கல்தச்சன் உளிமுதலியவைகளை எறிந்துவிட்டு அசங்காமல்நின்று கடவுளையே தியானித்துக்கொண்டிருந்தான். பகவானும் கைமாத்திரம் காணும்படியாய் வேளை தப்பாமல் அன்னமளித்து இம்மையில் காப்பாற்றி மறுமையிலும் காப்பாற்றினர். நம்பிக்கைவேண்டுவது அவசியம்.

பிறவிக்கடலைக்கடக்க சிறந்ததோர் உபாயத்தை உபதேசித்த சற்குருவின் வாக்கியத்தில் நம்பிக்கையில்லாமல் ஸந்தேகப்பட்டுச் சஞ்சலபுத்தியாய்த் திரிந்துகொண்டு நற்பயனையடையாததோடிராமல் அநேக கெடுதல்களையும் அடைந்தான். ''ஸம்சயத்துமா விநச்யதி'' என்று கண்ணனுபதேசப்படியாயிற்று. ஆகையால் சந்தேகப்படுவதுசாவுக்கேஇடமாகும். அதையொழித்து நம்பிக்கையுடனிருந்து எல்லோரும் சிரேயஸ்ஸை அடைவார்களாக, சுபம்

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

ப்ரமோத-௵ மாசி-௴ ௨௮

## நல்ல கார்யத்தில் ஆயாஸப்படலாம்.

ஆத்தும குணங்களுள் ஆயாஸமில்லாமையைக் கூறியதிலிருந்து சிலர் சோம்பேறித்தனத்தால் ஸ்வல்ப ஆயாஸமுண்டாவதாகத் தோன்றிவிட்டால் சாஸ்திரத்தில் நம்பிக்கைவைத்ததுபோல் அபினயித்து "ஆயாஸப்படக்கூடாதெ"ன சாஸ்திரம் போதிக்கிறபடி நடப்பதுதான் சிரேயஸ்கரமென்று சொல்லிக்கொண்டு நல்ல கார்யங்களில்கூட ஆயாஸப்படாமலிருக்கிறார்கள், நல்ல கார்யத்தில் ஆயாஸப்படாமலிருப்பதுபோல் மற்ற கார்யங்களிலும் உதாஸீனர்களாயிருந்துவிட்டால் ஆயாஸமில்லாமையென்ற ஆத்தும குணத்தையாசிரயித்தார்களெனலாம். நல்ல கார்யத்திலப்படிச் சொல்லிவிட்டு இவர்கள் அகார்யத்தில் படுகிற ஆயாஸத்தைப் பார்த்தால் அளவிலடங்காததாயிருக்கின்றது. அதனால் இம்மையில் ஏதோசில சிற்றின்பங்கள் பயனாக வந்திடினும் இவர்களுக்கு பரலோக சுகம் கிஞ்சிற்றேனும் கிடையாதென்பதோடு மாத்திரமல்ல. நரகத்திலும் மீளாத்துன்பத்தை அனுபவிக்கும்படி ஆய்விடும். பரலோகமும் கிடையாது. நரகமில்லையென்று கண்ணை மூடிக்கொணடு சொல்லிவிடக்கூடாது. குருடன் ஒன்றையும் காணமுடியாமையால் கண்ணுளார் கண்டுகளிக்கும் காக்ஷியை எல்லாமில்லையென்று சொல்லிவிடுவானாயினும் அது இல்லாமற் போய்விடுமா? ஆங்கு இவனுக்கு அந்த பாக்கியம் இல்லாமற் போயிற்றேயென்று வியஸனிப்பதுபோல் பரலோகமில்லையென்பாரிடமும்வியஸனிக்கவேண்டியதுதான். கண்ணைமூடிக்கொண்டு ஒருவருமில்லையென்று பூனை பாலைக்குடித்தால் பால்க்காரி சும்மாயிருப்பாளா? தடிகொண்டடித்து விரட்டுவதுபோல் நரகமில்லையென்று அசட்டுத்துணிச்சலால் கண்டதைச் செய்யத் தலைப்பட்டால் யமதர்மராஜா விடமாட்டான். இப்பிறவியிலும் சரீரம்

அசுத்தமாய்க்கெட்டுப்போவதுடன் மறுபிறப்பிலும் கிருமிகீடாதி அசுத்த சரீரத்தையே அடையவேண்டியதாய்விடும். அற்பமான சிற்றின்பத்தைப் பெறுவதற்குமாத்திரம் இச்சரீரம் நமக்குக்கடவுளால் கொடுக்கப்படவில்லை. பேரானந்தம் பெறுவதற்காகவல்லவா புண்ணியவசத்தால் கொடுக்கப்பட்டது. பேரானந்தம்பெறவேணுமென்று ஆசைப்பட்டதால் மாத்திரம் அது கிடைத்துவிடாது. பிரயாஸப்பட்டு தபஸ் முதலிய ஸாதனங்களையனுஷ்டித்தாற்றான் அசுத்தி விலகும். அசுத்தி விலகினாற்றான் சித்திபெறலாம். அங்ஙனமேபதஞ்சலிபகவான் "कायेन्द्रियसिद्धिरशुद्धिक्षयात् तपसः" "நித்யமும் விடாமல் தபஸ்ஸைச் செய்தவந்தால் சரீரத்திற்கும் இந்திரியங்களுக்குமுள்ள அசுத்தி விலகும். புடத்திலிட்ட பொன் போல் பரிசுத்தமாகும். ஆவாணமலம் நீங்கும். அது நீங்கினால் சரீரத்திற்கு அணிமாதி சித்திகிடைக்கும். மறைந்தும் வெகுதூரத்திலுமுள்ளவைகளையும் கேழ்ப்பது, பார்ப்பது முதலிய இந்திரிய ஸித்தியுமுண்டாகும்" என்று கூறினார். தபஸ்ஸின் வலிமையால் மனஸ்ஸின் அசுத்தியும் விலகினால் சுருதி முதலிய நற்பிரமாணங்களில் நாஸ்திக்கிய புத்தியால் நிகழ்ந்த அப்பிராமாண்ய புத்தி விலகும். அப்பொழுது சுருதியைப் பிரமாணமென நம்புவான். பிறகு அதில் உருசி அதிகப்படும். எப்பொழுதுமதையே அப்பியசிக்கும் சீலமுடையவனாவான். இந்தப்பெரும் புண்ணியத்தால் தேவர்கள், ரிஷிகள், ஸித்தர்கள் முதலிய இஷ்டதேவதைகள் கிட்டத்தென்படுவார்கள். கஷ்டத்தைவிலக்கி இஷ்டத்தைப்பூர்த்தி செய்வார்கள். ஸமாதியையும் நிலைக்கச்செய்வார்கள். ஈசுவரனிடத்தில் எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்து அவனையே சரணமடைந்தால் இவன் விரும்புவதெல்லாம் வீணாய்விடாது. தேசாந்தரத்திலேனும், காலாந்தரத்திலேனும், வேறு சரீரத்திலேனும் இஷ்டப்பட்டதைத் திட்டமாயடைவான். இவ்வளவையும் யோக சூத்திரத்தில் பதஞ்சலிபகவான் கூறியிருக்கின்றார். இவ்வளவு பெறுவதற்காகக் கிடைத்தப் புனிதமான பிறவியைப் பாழாகப் போகவிடாமல் புண்ணியத்தைத் தேடப்பிரயாஸப்படவேண்டும். புண்ணிய கார்யத்தில் பிரயாஸப்படாவிட்டால் மற்ற கார்யத்திலாவது கஷ்டப்படுவான். "கணப்பொழுதேனும் கர்மாவைச்செய்யாமலொருவனுமிருக்கமாட்டான்" என்றார் கண்ணன். புண்ணியத்தைவிட்டுப் பாபத்தைச் செய்வதைவிட பாபத்தைவிலக்கிப்

பாடுபட்டாலும் புண்ணியத்தைச் செய்வதே புருஷப்பிறவிபெற்ற தின் பயனாகும். இப்பிறவிபோல் எப்பிறவியுமாய்விட்மாட்டாது. இப்பிறவிபோனால் எப்பிறவிவருமோ அதுவும் தெரியமட்டாது. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற பழமொழிப்படி இம்மானிடப் பிறவியிலேயே மூதறிஞர் சொற்படி முன்னேற்ற மடைந்து முத்திநெறிநாடி மோக்ஷம் பெறுவீராக. சுபம்.

பத்திராதிபர்.

## மானிடப்பிறப்பும், மோக்ஷவிருப்பும் ஸத்குருவை அடைதலும்.

दुर्लभं त्रयमेवैतत् दैवानुग्रहहेतुकम् ।
मनुष्यत्वं मुमुक्षुत्वं महापुरुषसंश्रयः ॥

இந்த சுலோகத்தினால் நமது பரமாசாரியாள் உபதேசிப்ப தானது உலகத்தில் எந்த பதார்த்தமும் விலை அதிகமுள்ளதாயி னும் ஸுலபமாகப் பெறலாமென்றும், இரத்தினங்கள்போல் கிடைத்தற்கரிதான மனிதனைப் பிறப்பதும், மோக்ஷத்தை விரும் புவதும், ஸத்குருவை அடைவதுமாகிய இம்மூன்றும் ஜன்மாந்தி ரத்தில் ஈசுவரனைப் பூஜித்து அவனது அனுக்கிரகம் பூர்ணமாக ஏற்பட்டிருந்தால்தான் கிடைக்கும். இம்மூன்றும் கிடைப்பதரி தென்றுங்கூறியிருப்பதைச்சற்று யோஜித்துப்பார்த்தால் அதுஸரி யென்றே தோன்றுகிறது. "புண்யம் அதிகமாயிருந்தால் தேவப் பிறப்பும், பாவம் அதிகமாயிருந்தால் ஸ்தாவரப்பிறப்பும், இரண் டும் ஸமமாக இருந்தால் மானிடப்பிறப்பும் வரும்" என்று சுருதி கள் கூறுகின்றன. தேவலோகத்தில் வசித்து புண்யம் குறைந்த வுடன் பர்ஜன்னிய லோகத்துக்குவந்து அங்கிருந்து மழையின் வழியாக பூலோகத்தில்வந்து சேருகிறார்கள். மனிதனுக்கு ஆகா ரமாயுள்ள கொடி செடிகளில் வசிக்கிறார்கள். இதிலிருந்து எந்த மனிதனிடத்தில் பிறக்கவேண்டுமோ அவன்வரையில் செல்வது ரொம்ப வருந்தக்கூடிய நிலைமையாக இருக்கிறது. ஏனெனில் செடிகொடிகளாகவிருக்கும்பொழுது மாடுமுதலியவைகள் தின்று விட்டால் மறுபடியும் பர்ஜன்யலோகம் வரையில் சூரிய கிரணத்தி னால் இழுக்கப்பட்டு அதன்வழியாகப்போய் சேர்ந்து அவ்விடத் திலிருந்து திரும்பவும் மழையின் வழியாகக் கீழே வரவேண்டும். இம்மாதிரியாக ராட்டினம்போல் சுழண்டுகொண்டிருந்து புண்ய

வசத்தினால் மனிதனுடைய ஆஹாரத்தில்சேர்ந்து அதிலும் பாலனாகவோ விருத்தனாகவோயிருந்து புஜித்தாலும் பயன்படுவதில்லை. நல்லதருணனாகவிருந்து அவனது கர்ப்பத்தில்ரேதஸ்ஸு—வடிவமாக வசித்து அந்த ரேதஸ்ஸானது ஸ்திரீயின் வயிற்றில் வந்து எவ்விதமான குறையுமின்றி வஸித்து புருட உருவமும் அடைந்து மனிதனாகப் பிறக்கவேண்டும் 'மனுஷ்ய' என்கிற சப்தத்தினால் அறிவுடையவன். தனக்கு ஹிதமான காரியத்தைத் தேடுகிறவன் என்று அர்த்தத்தை விளக்குகிறது. இதையே பாமாசாரியாளும் கூறியிருக்கிறார்கள்

> इतः कोन्वस्ति मूढात्मा यस्तु स्वार्थे प्रमाद्यति ।
> दुर्लभं मानुषं देहं प्राप्य तत्रापि पौरुषम् ॥

மானிடப் பிறப்பிலும் புருஷனாகப்பிறந்து ஆத்மஹிதமான காரியத்தில் அஜாக்கிரதையாக இருப்பவனைப்போல் மூடன் உலகில் உண்டா? என்று சொல்வதினால் ஆத்மஹிதத்தைத் தேடுபவனே மனிதன் என்று தீர்மானிக்கப்படுகிறது.

இந்த மாதிரியான மானிட தேகத்தை ஒரு நகரமாகவே கூறவேண்டும். "பிரம்மதேவன் குதிரை, மாடு முதலிய சரீரங்களை ஸிருஷ்டிசெய்து ஜீவர்களை அழைத்துக் காட்டும்பொழுது இவைகளுக்கு ஆத்மஞானத்தை அடையக்கூடிய கருவிகள் போதுமானதாகவில்லையென்றும் தாங்களுக்கு போதாது என்றும் சொன்னபிறகு மானிடசரீரத்தை சிருஷ்டிசெய்து காண்பித்தவுடன் போதுமானதென்று சொன்னவுடன் அந்தசரீரத்தில்தான் ஜீவனாக உருவங்கொண்டு உள்ளே புகுந்தார்" என்று சுருதி கூறியிருப்பதனால் ஏழு உப்பரிக்கைகள் வைத்துக் கட்டப்பட்டபெரிய அரண்மனைபோன்ற இந்த நகரத்திற்கு ஓர் அரசன்போல் தான் இருந்துகொண்டு இவனது புண்ய பாவங்களின் பலன்களை அனுபவித்துக்கொண்டு சாக்ஷியாக விளங்குகிறார் என்பது இந்தமனித தேகத்துக்கும் இந்த மனிதப்பிறப்புக்கும் பெரிய கௌரவத்தைக் காட்டுகிறது. இப்படிப்பட்ட மானிடப்பிறப்பு கிடைப்பதரிது என்று கூறியது தவறல்ல.

இந்த ஜன்மத்தை அடைந்ததற்கு மோக்ஷத்தில்விருப்பமிருப்பதே பயனாகும். இந்த ஸம்ஸாரமாகிய கடலில் முழுகிக்கொண்டு உலகவாழ்க்கையில் கட்டுப்பட்டவனாக இருந்தால் இந்தக் கஷ்ட

த்தை நீக்கிக்கொள்ளாவிடில் எப்படி ஸுகம் கிடைக்கும். நித்தியமான ஸுகத்தை அடைவதுதானே பிரயோஜனம். ஒட்டகத்தின் கதைபோல் சோம்பேறியாயிருப்பது பிரயோஜனமில்லை. மோக்ஷத்தை அடைய எனக்கு அதிக இஷ்டந்தான். ஆனால் நமது வீட்டின் தொந்திரவுக்கு நான் இல்லாமல்போனால் குடும்பம் மிகவும் கஷ்டத்தை அடைந்துவிடும் ஆகையால் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்றும், இந்த சிறுவயதிலேயே கிளம்புவது நியாயமல்ல தகுதியான வயது வந்ததும் வீட்டை விட்டுக் கிளம்பவேண்டுமென்றும், சிலர் கூறுவதுபோல் அநேகர் சொல்வார்களுமுண்டு. இவர்கள் மோக்ஷ விஷயமாகக் கொஞ்சமேனும் பிரயத்னம் செய்யாமல் வாய்ப்பேச்சால் மாத்திரம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எத்தனை ஜன்மம் எடுத்தாலும்மோக்ஷம்கிடைப்பதரிது. அதற்குத்தகுந்தமுயற்சியை அடையவேண்டும். ஈசுவரன் கட்டளையாகிய சுருதிஸ்மிருதிகளில் எவரெவர்களுக்கு எங்கெந்த காரியங்கள் செய்யும்படி விதிக்கப்பட்டிருக்கின்றதோ அவைகளை சரியாக நடத்தி ஈசுவரனுக்கு திருப்தியுண்டாகும்படி நடந்துவரவேண்டும். அதனால் மனது சுத்தமாகி ஞானமுண்டாகும். ஈசுவரனை எப்பொழுதும் பஜிக்க வேண்டும்.

मनस्ते पादाब्जे निवसतु वचस्तोत्रफणितौ
करश्चाभ्यर्चायां श्रुतिरपि कथाकर्णनविधौ ।
तव ध्याने बुद्धिर्नयनयुगळं मूर्तिविभवे
परग्रन्थान् कैर्वा परमशिव जाने परमतः ॥

"என் மனதானது உனது சரணகமலத்திலும், என் வாக்கானது உனது துதியிலும், என் கரமானது உனது பூஜையிலும், என் காதானது உனது சரித்திரத்தைக் கேட்பதிலும், என் புத்தியானது உனது தியானத்திலும், என் கண்கள் உனது திவ்ய மூர்த்திதரிசனத்திலும் ஈடுபட்டு இருக்கவேண்டும். இம்மாதிரியே என்னுடைய கருவிகள் ஈடுபடுமாகில் எந்தக் கருவியைக்கொண்டு மற்ற நூல்களைப் படிப்பேன்" என்று சொல்லியபடி ஈச்வரவிஷயத்திலேயே நமது கருவிகளைச் செலுத்திக்கொண்டுவருவோமாகில் ஆத்மக்ஞானமுண்டாவதில் சிறிதும் ஸந்தேஹமில்லை. இதுவே இந்திரியநிக்கிரஹம் என்று சொல்லப்படும். காமக்குரோதம் முத

யியவைகளையும் அடக்கி, சமம் முதலிய ஸாதனங்களையுமடைந்து, மோக்ஷத்தில் விருப்பமுண்டாகி, ஸத்குருவை அடைய முயலுகிறான். இப்படி மோக்ஷத்தில் விருப்பமுண்டாவது மிகவும் அரிதென்று கூறினார். இப்படி மோக்ஷவிருப்பமடைந்ததற்கு ஸத்குருவை அடைந்தாற்றான் அந்த மோக்ஷம் கிடைக்கும். ஸத்குருவை அடையவேண்டுமென்பதாக சுருதி கூறுவதினால் "நல்ல காலமிருந்தால் ஸத்குரு நம்மைத்தேடிவருவார்" என்று சொல்வது நியாயமாகாது. ஒருவாறு இவனது புண்யவசத்தினால் ஸத்குரு நேரில் வந்தாலும் வரலாம். (விட்ட குறை தொட்ட குறையால் யோகப்ரஷ்டனாக ஒரு ஐசுவரியவானுடைய கிருகத்தில் பிறந்திருந்து ஒரு பிரபுவுக்கு ஒரு யதீசுவரருடைய அனுக்கிரகத்தினால் ஸாலக்கிராமபூஜைமுதல் தானே சுவாமியென்றவரை கிடைத்ததுபோல்) அதிக புண்யமிருந்தால் கிடைக்கலாம். அப்படியே நாமுமிருக்கலாமென்று நினைப்பது தவறாகும். பிரயத்தினமடைவது ரொம்பவும் அவசியமாகும். நாதமுனிவர் ஸனத்குமாரரிடம் சென்று "ஏ ஸத்குருவே! இந்த ஸம்ஸாரக் கடலைத் தாண்டும் உபாயத்தை உபதேசிக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டபிறகு அந்த பிரம்மமென்பது ரொம்ப பெருமை வாய்ந்தது எங்கும் நிறைந்தது என்றும், அதற்கு ஸாதனங்கள் தயவு, ஸத்தியம், சௌசம், தபஸு என்றவைகளாம் என்றும் உபதேசித்து அனுக்கிரஹித்தார். ஜானசுருதியென்று ஓர் அரசன் ஹம்ஸபக்ஷிகளின் வாக்கியத்தினால் ஸத்குருவாகிய ரைக்குவமஹரிஷியைத் தேடிப்பிடித்து அநேகவிதமான தனது சம்பத்துக்களையும் கொடுத்தும் ஒத்துக்கொள்ளாதவராய் விவாகம் செய்து கொள்ளவேண்டிய விருப்பத்தைத் தெரிந்துகொண்டு தனது பெண்ணையும் அவருக்கு விவாகம்செய்துகொடுத்தும் அவருடைய மனப்பூர்த்தியானவுடன் உபதேசத்தைப் பெற்று அனுக்கிரகமடைந்து கிருதார்த்தனாகிவிட்டார் என்கிற இதுபோன்ற சரித்திரங்களால் ஸத்குருவையடைந்து அவரது அனுக்கிரகத்துக்குப் பாத்திரனாகவேண்டுமென்பதைக் கருதி நமது ஆசாரியாள் ஸத்குருவை அடைவதும் துர்லபமென்று கூறினார். இவ்விதமான மூன்று இரத்தினங்களை தைவானுக்கிரகத்தால் பெற்று ஒரு ஆபரணமாகச் செய்துகொண்டவனுக்கு மறுஜன்மமில்லையென்பது நிச்சயம்.

—— கச்சபேச்வரசாஸ்திரிகள்.

# கீதாதி பாராயணம்.

எவர்கள் கீதாபாராயணம் செய்யவில்லையோ அவர்கள் இந்து என பெயர்கூட சொல்லிக்கொள்ள உரிமையடையமாட்டார்களென இப்பொழுதுள்ள மஹாத்மாக்கள் கூறிவரவில்லையா? ஒப்பற்ற ரத்னமெனப் பெயர்பூண்ட இராமாயண பாரதாதிகள் எவர் மனதிலில்லையோ அவர் உண்மையான பாரதநாட்டார்களாவார்களா? மூலக்கிரந்தபரிசீலனத்தால் எவ்வளவு புத்திவிகாஸமடையுமோ அவ்வளவு மொழிபெயர்ப்பாலடையமுடியுமா? ஒருபோதும் முடியாது. இவ்விரண்டையும் ஆராய்பவர்களுக்கு இது புலப்படாமல் போகாது. ஸம்ஸ்கிருதாபிமானிகள் ஒத்துமையுடன் உழைத்துவரவேண்டும். இல்லாவிடில் இரண்டு மூன்று வித்வான்கள் ஓரிடம் கூடினால் கலஹமும் கூடிச் சென்றுவருகிறது. ஒருவர் மற்றவரை நிந்திப்பார், மற்றவர் தனது கம்பீரமான ப்ரதித்வனியால் விரட்டுவர். நீ அக்ஞன் மூடன், உன் ஸித்தாந்தம் ஸரியல்லவெனக் கர்ஜிப்பார். இங்ஙனமாயின் எவரது ஸித்தாந்தம் முடிவடையும்? ஒருநாளும் வழக்குமோயாது. பாமரர்களைப்போல் கலஹம் செய்யுமிவர்கள் எப்படி மற்றவரின் எண்ணத்தையறியமுடியும்? அப்படியல்லாமல் ஸகோதரபாவத்துடன் அன்பாக ஒருவர் அபிப்ராயத்தை நன்கறிந்து அதன் குணதோஷங்களை எடுத்துரைத்து ஒருவரோடொருவர் வைரத்தைவிட்டு வியவஹரிப்பாரானால் ஒருவருக்கும் மற்றவருக்கும் ஒற்றுமையுண்டானால் இப்பாஷைக்கு ஒரு அழகு விருத்தியாகும். இவ்வழியாகவே ஆராய்ச்சியின் சக்தி உலகில் சீக்கிரத்தில் விருத்தியடையும். பிறர் மனதிலுள்ள எண்ணங்கள் நன்கு புலப்படும். இவ்வபிப்ராயத்திற்குப் பண்டிதர்கள் வருவார்களேயானால் நமது பாஷை உயர்ந்த பெருமையையடையும். இதர பாஷையில் தேர்ச்சி பெற்றவர்கள் எவ்விதம் அப்பாஷையிலேயே லேகநாதிகளை உபயோகிக்கிறார்களோ, அவ்விதமே இங்கும் முறையைக் கொண்டாடிவரவேண்டும். ஆகவே மற்ற பாஷையைப்போல் ப்ரசாரம் மிகுதியடையும். இப்பாஷைக்கு சமீபத்திலேற்பட்ட இறந்தபாஷை எனப் போலிப்பெயரும் நீங்கும். பாஷாப்ரசாரத்திற்கு பத்திரிகை இன்றியமையாதென்பதை ஆர்யநேயர்கள் அறிவார்கள்.

ஸம்ஸ்கிருதமயமான பத்திரிகைகள் ரொம்பவும்குறைவு. ஒன்றிரண் டிருந்தால் அதுவும் காலத்தில் நேயர்களை அடைவதில்லை. பாஷாந் திரபத்திரிகைபோல் அவ்வளவு திருப்தி செய்யக்கூடியதாயுமில்லை. ஸம்ஸ்கிருதமயமான பத்திரிகைகள் ஸுலபமாகவும் அதிகமாகவும் உண்டாகும்படி செய்யவேண்டியதே நமது கடமையாகும். அப் பொழுது பாஷை ரொம்பவும் மேன்மைநிலைமையடையும். எல்லோ ரும் ஒற்றுமையுடன் இக்கார்யத்தை ஆரம்பித்தால் பயனடையா மல் போகாது. சில பத்திரிகைகளில் சாஸ்திரீயவிஷயங்கள் ரொம்பவும் மிகுதியாகக் காணப்படுகின்றன. அது சாஸ்திரம் கற்றவர்களில் சிலருக்கு உபகரிக்கும். அதனால் எப்படி பாமரர் கள் திருப்தியடைவது? சாஸ்திரீயவழியை விலக்கி லலிதமாயும் பிரஸித்தார்த்தமான பதங்களைச் சேர்த்து எளிதில் எல்லோருமறி யும்படியான விஷயங்களை எழுதினால் அது மனமகிழ்ச்சியைப் பாமரர்களுக்களிப்பதுடன் பாஷாக்ஞானம் மேன்மேலபிவிருத்தி யடையும். ஆர்யர்களே நான் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்வதாவது— நமது ஜீவாதாரமான பாஷை உலகில் எப்படி கொண்டாடப்படுமோ, எப்படி யாவராலும் பேசப்படுமோ, அவ் விதமான உபாயங்களைத்தேடி அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்து ஸம்ஸ்கிருதபாஷையிலேயே ஸ்ரீராமாயணாதிகளைப் பாரா யணம் செய்து அதனால் ஸகல ச்ரேயஸ்ஸையும் நாம் அடைய வேண்டும்படி ஈசனை வேண்டுகிறேன்.

K. R. வைத்தினாதசாஸ்திரி.

---

# கோவல் வீரட்டானம்.

ஆர்யதர்மாபிவர்த்தினி பிராம்மணமஹாசபையின் வருஷோத் ஸவ நடவடிக்கைகளின் விபரம்.

ஷை சபையின் வருஷோத்ஸவம் நாளது பிரமோதஹு மாசிமீ 9, 10, 11வக்கு சரியான 1931 பிப்ரவரிமீ 20,21,22வ யாகிய சுக்கிர, சனி, பானுவாரங்களில் நடைபெற்றது.

20—2—31 காலை 8-மணி.

ஸ்ரீ சங்கராச்சார்யஸ்வாமிகளவாள் பிரசாதத்தை எடுத்துக் கொண்டு உபநிஷத்பாராயணத்துடனும் மேளவாத்தியத்துடனும்

சபை,கோவல்வீரட்டானம் ஸ்ரீபிரகந்நாயகியம்மன்சந்நிதியில்துவக்கப்பட்டது. ஆசாரியாள் பிரசாதம் எல்லோருக்கும் விநியோகமானவுடன் சபை அக்கிராஸனர் பிர்ம்மஸ்ரீ டி. எஸ். ராமச்சந்திர அய்யரால் பிரரேபிக்கப்பட்டு எல்லோராலும் ஏகமனதாக ஸ்ரீ அருணசலேசுவர க்ஷேத்திரவாசியாகிய ஜி. வெங்கிட்டராமய்யரவர்களை வருஷோத்ஸவத்துக்கு அக்கிராசனம் வகிக்கும்படி பிரார்த்திக்கப்பட்டு ஷியார் அக்கிராசனத்தின்கீழ் சபை ஆரம்பித்தது.

அக்கிராசனர் முகவுரையில் இந்த மஹாசபையின் முக்கிய நோக்கங்களை எடுத்துச் சொல்லிவிட்டு, இம்மாதிரி அடிக்கடி மஹாநாடுகள்கூட்டி, பலவிதமான காரணங்களை முன்னிட்டு, கொஞ்சம் கொஞ்சமாக சீர்குலைந்துவரும் பண்டைகால வேத சாஸ்திர தர்மங்களை சீர்திருத்தி அவைகளை பொதுஜனங்களிடையே பாவும்படி ஒவ்வொரு ஆஸ்திக பிராமணரும் முன்வந்து முயற்சி செய்துவரவேண்டுமென்றும், அவ்வாறு செய்தால்தான் நமது பண்டைக்கால தெய்வீக வாழ்க்கையும் ஜன சமூகத்தின் முன்னேற்றமும் ஏற்படுவதற்கு சௌர்யமாக இருக்குமென்று சொன்னார்.

பின்னர் காரியதரிசியால் வருஷாந்திர ரிபோர்ட் வரவுசிலவு கணக்கு படிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பிறகு அக்கிராசனர் ஸ்ரீ வால்மீகி இராமாயணம் பாலகாண்டத்தை ஆரம்பித்து ஸ்ரீ ராமஜனனத்துடன் கதை ஸ்ரீ வால்மீகி இராமாயண மூலத்திலுள்ளபடி தத்வார்த்தங்களுடன் விமரிசையாக உபந்யசித்தார்.

ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் டி.வி.லக்ஷ்மீநாராயணசாஸ்திரிகள் அவர்கள் 'மதம்' என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானதேவை என்றும் ஆர்யாபிமானிகளான நம்முடைய மதம் வைதிகமென்றும், ஸநாதன வைதிகர்களென்றும், தம்தம்மதத்தை விட்டுநழுவக்கூடாதென்றும், இம்மாதிரி பல சபைகள்தோன்றி இவ்வார்ய மதத்தைவிருத்தி செய்யவேண்டுமென்றும் உபந்யசிக்க 11-மணிக்கு ஸபைகலைந்தது. மாலை 3-30 மணி

ஷி டி. வி. லெக்ஷ்மீநாராயண சாஸ்திரிகளவர்கள் ஸுப்ரமணியஸ்வாமிகுமாரிலபட்டராக அவதரித்து பௌத்தமதசித்தாந்தங்களை ஆராய்ச்சிசெய்து ஷிமதத்தை நிராகரித்து கண்டனம்

செய்து வைதிகமதத்தை ஸ்தாபித்த பெருமையைப்பற்றி விஸ்தார மாக 1-மணிநேரம் உபந்யசித்தார்.

பிறகு அக்கிராசனர் காலை இராமாயணத்தில் முடித்ததிலி ருந்து மறுபடியும் மேலே ஆரம்பித்து விசுவாமித்திரயாகம்முடிவு வரைக்கும் மத்தியில் விசுவாமித்திரர் தசரதமகாராஜாவை ஸ்ரீராம லக்ஷ்மணர்களை தரவேண்டுமென்று யாசித்த இடத்தில் இருவருக் கும் நடந்த தர்க்கத்தை ஸபையோர் மிகவும் ஆனந்தபரவசமாகக் கேட்டு அனுபவிக்கும்படி சொல்ல மாலை சந்தியா காலத்தில் ஸபை கலைந்தது. 21—2—30 காலை 8-மணி

மறுநாள் மறுபடியும் சபைகூடி திருச்சி ஜில்லா கிருஷ்ண ராயபுரம் பிர்மஸ்ரீ ஏ. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரிகளவர்கள் பகவத்கீதா தாத்பர்யம் என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் தேர்நெடுத்த தன் சிஷ்யனாகிய அர்ச் சுனனுக்கு யுத்தகாலத்தில், ஒவ்வொருவரும் தன்னுடைய வர் ணாச்ரமத்தைத் தான் அனுஷ்டிக்கவேண்டுமென்று சுட்டிக்காட் டியதுபோல் யுத்தகாலத்தில் அவனுக்கு க்ஷத்திரியதர்மத்தையே உபதேசித்ததைப் பற்றியும் ஒவ்வொருவருக்கும் கர்மா முக்கிய மென்றும் அதிலிருந்தே உபாஸனம் ஏற்படுமென்றும் அதற்கு பிறகுதான் ஞானமுண்டாகுமென்றும், பல சுருதிவாக்கியங்களு டனும் மேற்கோள்களுடனும் கர்மகாண்ட முடிய உபந்யசித்தார்.

மாலை 3-மணி

ஸ்ரீமடத்திலிருந்து அனுக்கிரகத்துடன் அளிக்கப்பெற்ற ருத்திராக்ஷ மாலைகளுடன் ஸ்ரீமான் நாராயணராவ் என்பவர் இந் நகரில் இச்சபையானது எக்காலத்திலும் ஓங்கிவளர்ந்து நிலை பெற்று நிற்குமாறும் ஆஸ்திகர்களுடைய ஊக்கம் அதிகப்பட வேண்டுமென்றும் ஷை சபையின் கார்யஸ்தர்களான அக்கிராசன ருக்கும், காரியதரிசிகளுக்கும், மற்றும் மஹாநாட்டுத் தலைவர்க் கும் ஷை ருத்திராக்ஷ மாலைகளை, பெரியவாளுடைய அனுக்கிரக மாகிறமாங்கல்ய பாவனையாக ஆசீர்வாதத்தினிடையே அம்மன் சந்நிதியில் ஸ்திரவாரத்தில் பரிசளித்தார். ஆசார்யாளுடைய கருணைக்கு அளவிலா ஆனந்தங்கொண்டு சபையோர்கள் ஷை ஆனந்தத்தை நமஸ்காரபூர்வம் வெளிப்படுத்தினார்கள்.

பின்னர் ஷை ஊர் உயர்தர கலாசாலை ஸமஸ்கிருத பண்டித ரான ஸ்ரீ ஆராவமுதாச்சாரியார் தத்வத்ரயம் என்று சொல்லப்

பட்ட சித், அசித், ஆனந்தம் என்கிற மூன்று விஷயங்களையும் விசிஷ்டாத்வைத அனுஷ்டானப்படிக்கு வெகுவிமரிசையாக உபந்யசித்தார்.

பிறகு பகவத்கீதாதாத்பர்ய விஷயமாக உபாஸனகாண்டம் ஞானகாண்டம்இவ்விரண்டு பாகங்களும் ஷை ஸ்ரீமான் ஏ. ஆர். வெங்கிட்ருமசாஸ்திரிகளால் சவிஸ்தாரமாக உபந்யசிக்கப்பட்டது.

கோவல் நியாயவாதி டீ. ஏ. தாத்தாசார்யஸ்வாமிகள் திருக்கோவிலூர் க்ஷேத்திரமஹிமையைப்பற்றி சொல்லி இங்கு வீற்றிருக்கும் ஸ்ரீதிருவிக்கிரமபெருமாளின் சரிதையையும்பற்றி பேசினார். பிறகு பிர்மண்ணியத்திற்கு உபலக்ஷணங்களான விடியற்கால ஸ்நாநம், த்ரிகாலசந்தியாவந்தனம் ஒவ்வொரு பிராமணரும் அவசியம் அனுஷ்டிக்கவேண்டுமென்றும், அப்படி அனுஷ்டித்து க்ஷத்திரியராயிருந்த விசுவாமித்திரர் தபோமஹிமையால் பிர்மண்யத்தைப் பெற்ற விபரத்தை நன்கு எடுத்துச்சொல்ல சந்தியா காலத்தில் சபை முடிந்தது.

சந்தியாவந்தனத்திற்குப்பிறகு கர்மாவின் விசேஷத்தையும் கேவலம் ஞானத்தின் வைபவத்தையும் காட்டக்கூடிய ஸ்ரீமத் பகவத்பாதாசாரியாளின் சரித்திரத்தில் மண்டலமிச்சிர ஸம்வாதம் என்னும் பாகத்தை ஏ. ஆர் வெங்கட்டராம சாஸ்திரிகள் வெகு உருக்கமாக உபந்யசிக்க 9-மணிக்கு கூட்டம் கலைந்தது.

22—2—31 காலை 8-மணி.

ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதி பூஷண வாசூர் வெங்கட்டராமசாஸ்திரிகளவர்கள் உலகத்தில் உயர்வுதாழ்வு உண்டென்றும் வியக்தி உண்டானதுமுதல் ஜாதி உண்டென்றும் பிறவியினாலேயே ஜாதிபேதம் உண்டென்றும் பிராம்மண்யம் உயர்ந்ததென்றும் பிறப்பினாலேசித்திக்குமென்றும் சாஸ்திரஞானமில்லாத பாமரர்கள்மனதில் படும்படி பல அரிய உதாஹரணங்களுடன் ஜாதி வர்ணாச்ரமத்தை சாதிக்க காலை கூட்டம் கலைந்தது.

மாலை 3-மணிஷை பாஷ்யபாவக்ஞ வெங்கட்டராம சாஸ்திரிகள் பிர்மண்யத்திற்குஉள்ள கர்மாக்களையும் தற்கால ஸ்திதிக்குத் தக்கபடி அவர்கள் அவசியம் விடாமல் அனுஷ்டிக்கவேண்டிய கர்மாக்களையும் அதின் பலன்களையும் அவைகளில் நம்பிக்கை ஏற்

படும்படி எல்லோரும் ஆச்சர்யமடைய வெகு தெளிவாக குழந்தைகளுக்குப் பாலூட்டுவதுபோல் பல ஹாஸ்யஉதாஹரணங்களுடன் ஸபையோருக்குப் போட்டினர். சந்தியாவந்தனத்திற்கு சபையோர்கள் எல்லோரும் எழுந்தார்கள்.

பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன-

1. அக்ஷராப்பியாசகாலத்திலேயே ஸம்ஸ்கிருத அக்ஷரங்களையும், பிராசீனஸ்தோத்திரங்களையும் சிறுவர்களுக்குக் கற்பிக்க வேண்டியதுடன் தற்காலம் ஆங்கிலவித்யாசாலையில் அப்பியசிக்கும் பிராம்மணவித்தியார்த்திகளை ஸம்ஸ்கிருதத்தையே முக்கிய பாடமாக எடுத்துக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்குமாறு தீர்மானிக்கப்படுகிறது.

2. உபநயனத்திற்குப் பிறகு த்ரிகாலஸந்தியாவந்தனம், சாயங்காலம் ஈசுவரதரிசனம் இவைகளைத் தவறாமல் செய்ய வேண்டுமாக இச்சபை தீர்மானிக்கிறது.

3. உபநயனத்திற்குப்பிறகு அவசியமான வேதபாகத்தை குறைந்தது இரண்டு வருஷமாவது அப்பியசிக்கவேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.

4. சாரதா ஆக்ட்விஷயத்தில் ராஜாபகதூர் ஜீ கிருஷ்ணமாசாரியார் கொண்டுவரும் திருத்தமசோதாவை இச்சபையார் முழுமனதோடு ஆதரிப்பதாகத் தீர்மானித்து ஷை தீர்மானத்தின் நகலை ஸ்ரீமான் கிருஷ்ணமாசாரியாருக்கும் ராஜப்ரதிநிதிக்குமனுப்பும்படி தீர்மானிக்கிறது.

5. சுபசோபனுதி வைதிககர்மா நடக்கும்போது பிராமண சபைக்கு சுபகார்யங்களில் 4-அணுவும் இதரகாலத்தில் 2-அணுவும் கவனித்து ஒரு சம்பாவனை செய்யுமாறு 'த்ரிமதஸ்தர்களையும் கேட்டுக்கொள்ளுமாறு தீர்மானித்திருக்கிறது.

6. பணம் இருக்கும்பொழுது கிராமத்தின் சுகாதாரத்தையும் பிரதமசிகித்ஸைக்கு வேண்டிய ஔஷதங்களையும் வைத்து வேண்டியவர்களுக்கு உதவுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

7. பிரதி ஞாயிற்றுக்கிழமையும் மாலையில் மதசம்பந்தமாக சபைகூட்டித் தவறாமல் ஒவ்வொருவரும் விஜயம் செய்து பிரசங்கங்கள் செய்து நடத்திவைக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்படுகிறது.

8. அனாவசியமான விவகாரச்செலவுகளையும் கல்யாணம்முதலிய சுபசோபனங்களில் ஏற்படும் செலவுகளையும் கூடியவரையில் குறைத்து சிக்கனமாக நடக்கும்படிக்கும் பிராசீனசம்பிரதாயங்களை கைக்கொள்ளுமாறும் பிராமணர்களைக் கேட்டுக்கொள்ளும்படி தீர்மானிக்கிறது.

9. நமது நாட்டு கைத்தொழில் அபிவிருத்திக்கு அனுகூலமாகக் கதராடை தரிக்குமாறு எல்லோரையும் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்படுகிறது.

பிறகு நம் நகர் நியாயவாதிகள் பிர்ம்மஸ்ரீ ஸீ. வி. நாராயணஸாமி அய்யாவர்களும் ஸ்ரீமான் உப-வே டி. ஏ. தாதாசாரியஸ்வாமிகளவர்களும் மஹாநாட்டு சபைத்தலைவருக்கும் மற்றும் வந்திருந்த வித்வான்களுக்கும் வந்தனோபசாரம் சொல்ல வருஷ உற்சவம் இனிது முடிந்தது. சுபம்.

K. R. சுப்ரமண்யசாஸ்திரி,
காரியதரிசி.

---

## ஸ்னாதக தர்மம்.

புலன்கள்சென்ற வழிவிடாது ஆசானடிவணங்கி அவன் அனுக்கிரகம்பெற்று ஆறங்கங்களுடனும், நான்கு உபாங்கங்களுடனும் வேதங்களை முற்றும் கற்றுணரவேண்டும். அங்ஙனம்வேதங்களைக் கற்றபிறகு வேதவிரதங்களைப் பூர்த்திசெய்து குருவுக்கு தக்ஷிணையும் கொடுத்துஸ்னானம் (விரதஸமாவர்த்தனம்) செய்ய வேண்டும். அங்ஙனமே யாக்ஞவல்க்கியரும்—

गुरवे तु वरं दत्वा स्नायीत तदनुज्ञया ।
वेदान् व्रतानि वा पारं नीत्वा ह्युभयमेव वा ॥

"வேதங்களையாவது. விரதங்களையாவது, இரண்டுகளையுமாவது, முடித்துக்கொண்டு குருவுக்கு தக்ஷிணையைக் கொடுத்துவிட்டு. அவரனுமதிபெற்று ஸமாவர்த்தனம் செய்யவேண்டும்" என்று விதிக்கின்றார். ஆகையால் குருவுக்கு தக்ஷிணைகொடுப்பதும் வேதாத்தியயனத்திற்குப்பிறகேயன்றி முந்திக்கக் கூடாது. அதற்கு முன் ஏதேனும் கொடுத்தால் குற்றமுண்டென தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன. அங்ஙனமே மனு

न पूर्वं गुरवे किञ्चिदुपकुर्वीत धर्मवित् ।
स्नास्यंस्तु गुरुणाज्ञप्तः शक्त्या गुर्वर्थमाहरेत् ॥
क्षेत्रं हिरण्यं गामश्वं छत्रोपानहमंततः ।
धान्यं वासांसि शाकं वा गुरवे प्रीतिमाहरन् ॥

"குருவுக்கு வேதாத்தியயனத்திற்கு முன் தர்மமறிந்த சிஷ்யன் ஒன்றையும் கொடுக்கக் கூடாது. குருவின் ஆக்ஞையால் ஸ்நானம் செய்யப்போகிறவன் பூமி, சுவர்ணம், பசு, குதிரை, கொடை, பாதரக்ஷை தான்யம், வஸ்திரங்கள், இவைகளுள் அகப்பட்ட வரையில் சம்பாதித்து ஆசாரியனுக்கு கொடுத்து அவன்பிரீதியை சம்பாதிக்கவேண்டும்" என்றார். இதனால் அவனவன் சக்தியி லடங்கியமட்டும் குரு தக்ஷிணை கொடுக்கவேண்டுமென்று ஏற்படு கிறது. இங்கு ஸ்நாதகனுக்கு முக்கியமாய் வேண்டிய குறி களைக்கூறுவாம்—

यज्ञोपवीतद्वितयं सोदकं च कमण्डलुम् ।
छत्रं चोष्णीषममलं पादुके चाप्युपानहौ ॥
रौक्मे च कुण्डले वेदं कृत्तकेशनखः शुचिः ।
स्वाध्याये नित्ययुक्तस्स्यात् बहिर्माल्यं च धारयेत् ॥
शुक्लांबरधरो नित्यं सुगन्धः प्रियदर्शनः ।

"ஸ்நாதகன் இரண்டு பூணூல்களையும், ஜலத்தோடு கமண்டலத்தை யும், குடை பாதரக்ஷகளையும், இரண்டு ஸ்வர்ண குண்டலங்களை யும் தரிக்கவேண்டும். நகம் முதலிய ஸர்வாங்கவபனம் செய்து கொள்ளவேண்டும். வேதாத்தியயனம் மறவாமல் நித்தியம்சொல்லி வரவேண்டும். வெளுத்த ஆடைகளை ஐந்து கச்சங்களுடன் உடுக்கவேண்டும். புஷ்பமாலை ஸுகந்த வஸ்துக்கள் இவைகளைத் தரிக்கவேண்டும். பலரும் பார்க்கப் பிரியப்படும்படி இருக்கவேண் டும்" என்று ஸ்மிருதிகளில் கூறியவாறு செய்யவேண்டும். இவற் றுள் ஒவ்வொன்றையும் தரிப்பதற்கு ஒவ்வொரு மந்திரமுண்டு. அவை சாகைகள்தோறும் வேறுபடும். ஆகவே அவைகளை அவ ரவர் சூத்திரங்களிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். இங்கு கூறப்பட்ட ஸ்நாதக விருதத்திற்கு முன் அனேக விரதங்களுள. அவைகளும் சாகைகளின் பேதத்தால் வேறுபடும். ஆகவே அவை களையும் அவரவரது கிருஹ்யத்தில்கூறியவாறு அனுஷ்டிக்கவேண்

டும், அவைகளைச்செய்து முடித்தவன்தான் விவாஹத்திற்கு யோக்கியனாவான். ஆதலாற்றான்—

गुरुणाऽनुमतः स्नात्वा समावृत्तो यथाविधि ।
उद्वहेत द्विजो भार्यां सवर्णां लक्षणान्विताम् ॥

"குருவின் அனுமதிபெற்று, விதிவழுவாது விரதங்களைச் செய்து ஸ்நானம்செய்து, பிறகு தன் ஜாதியிற்பிறந்த நல்ல லக்ஷணம் பொருந்திய பெண்ணை விவாகம் செய்துகொள்ளவேண்டும்" என்று மனு விதித்தார். விவாஹப்பெண்ணின் லக்ஷணம் ஸூத்திரங்களிலும் ஸ்மிருதிகளிலும் விரிவாகக் கூறப்படுகிறது. அதிற் சிலவற்றை இங்கு கூறுவாம். விவாஹப்பெண் மெதுவான சரீரமுள்ளவளும், நல்ல பெயர், நல்ல நடத்தையுள்ளவளும், அதிக ரோமமில்லாதவளும், நல்ல குரலுள்ளவளும், அங்கம் குறையாதவளும், நல்ல குலத்தில் பிறந்தவளும், பெரியோர் புகழத்தக்க நற்குணம் பொருந்தியவளும், நல்ல சுபக்குறியைப் பெற்றவளும் அன்ன நடையாளும் உத்தம பத்தினியாவாள். இல்லாவிடில் பத்தினியாவதற்குறியவளாகமாட்டாள். மேற்கண்ட லக்ஷணங்கள் அமையப்பெறாதபெண்கள் சோதிடத்திலும் நிந்திக்கப்படுவதால் அவர்களை விவாஹம் செய்துகொண்டால் ஆயுஸ் குறைவாவது, ஆபத்தாவது, தாரித்திரியமாவது, அபமிருத்தியுவாவது நேரும். விகாரமாயுள்ள அதிக அங்கங்களையுடையவளும் நீண்ட ரோகமுள்ள குலத்திலுதித்தவளும், கேசமில்லாதவளும் அதிக ரோமங்களுள்ளவளும், கடுஞ்சொற் காட்டுபவளும், நக்ஷத்திரம் நதி மரம் மலை இவற்றின் பெயருள்ளவளும், விவாஹத்திற்குறியவளல்ல. விஷ்ணு புராணத்திலும்—

न श्मश्रुव्यंजनवतीं नचैव पुरुषाकृतिम् ।
नघर्घरस्वरां क्षामां तथा काकस्वरां न च ॥
नानिबद्धेक्षणां तद्वत् वृत्ताक्षीं मुद्वहेत् बुधः ।
न वामनां नातिदीर्घां नोद्वहेत् सङ्गतभ्रुवम् ॥
न चातिच्छिन्द्रदशनां न करालमुखीं नरः ।

"முகத்தில் மீசை முதலிய விகாரமுள்ளவளும், புருஷனைப்போல் ஆண்மை மிகுந்தவளும், கடோக்குரலுள்ளவளும், மிகவுமிளைத்தவளும் காக்கையின் தொனியுடையவளும் கடூமான அமைப்புள்

ளவளும், உருண்ட கண்ணுடையவளும், மிகக் குட்டையாயும் மிக்க நெட்டையாயும் இருப்பவளும், இருபுருவங்களும் ஒன்று சேர்ந்திருப்பவளும் பற்களில் பல இடுக்குகளுள்ளவளும் முகத்தில் விகாரமுள்ளவளும் விவாஹம் செய்யத்தகாதவள் என்று கூறப்பட்டது. நமது தேசத்தில் விவாஹமென்பது கேவலம் போகத்தைமாத்திரம் பிரயோஜனமாகக்கொண்டதில்லை. ஆனால் அநேக தர்மங்களைச் செய்வதற்கே காரணமாம். ஆகையால் பரம்பரையாய் இது முக்திஹேதுவாம். நல்ல ஆர்யபரம்பராவிருத்தியும் இதனாற்றானும்: தர்மப்பிரஜைகளுக்காகவென்றே நம்மவர் பெண்களை விவாஹம் செய்துகொள்ளுகின்றனர். மற்ற தேசத்தவர்கோவெனில் விவாஹமென்பது விலங்குகளைப்போல் ஏதோ ஒருவித வீண் கட்டுப்பாடாம். அதனாற்றான் அவர்களுக்கு விவாகத்தில் நியமங்கள் ஏதுமில்லாதது ஸஹஜமாயிற்று. அவனவனுக்குத் தோன்றியபடி அவனவன் இவ்விஷயத்திலிருந்து விட்டால் உலகத்துக்குவரும் கேடுகள் அளவற்றவைகளென்பதையறியாதார் எவர்? மிருகங்கள் சம்போகவிஷயத்தில் எப்படி இருந்தபோதிலும் திருஷ்டமாயும் அதிருஷ்டமாயும் அதிகதோஷங்கள் ஸ்பஷ்டமாய் காணப்படாவிடினும் ஸூக்ஷ்மமாய்ப்பார்த்தால் ஆங்கு தோஷமுண்டென்றே புலப்படும் அதனாற்றான் நம்மார்யர்கள் விவாகத்தில் பல நியமங்களை விதித்தார்கள். நம்மவர் செய்துகொள்ளும் விவாக ஸம்ஸ்காரத்தில் உபயோகிக்கும் மந்திரங்களை மந்திரார்த்த ஞானத்துடன் கெவனித்தால் அந்த நியமங்களினுண்மை வெளிப்படும். இக்காலத்தில் சிலர் புனர்விவாகத்தையும் பிரௌடா விவாகத்தையும், விதவாவிவாஹத்தையும் செய்தேதீரவேண்டுமெனச் சபைகூட்டிச் சித்தாந்தப்படுத்த முயலுகின்றனர். நம்முன்னோர் தர்மலக்ஷணங்கூறுமிடத்துச் சபைகூட்டிச் சித்தாந்தப்படுத்துவதே தர்மலக்ஷணமெனக்கூறினார் இல்லை. ஆனால் சிரேயஸ் ஸாதனமெனச் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டதே தர்மமென்றார். விவாஹஸம்காரமும் தர்மமாகவேண்டுமானால் சாஸ்திரத்தில் கூறியபடி நடத்தினால் தான் தர்மமாகும். சாஸ்திரமோ புனர்விவாகத்தையும் பிரௌடா விவாகத்தையும் விதவாவிவாகத்தையும் தடுக்கின்றது.

अनन्यपूर्विकां कान्तां असपिण्डां यवीयसीम् ।
अरोगिणीं भ्रातृमतीं असमानार्षगोत्रजाम् ॥

"முன்னெவனையும் அடையாதவளும், மனதிற்கிசைந்தவளும், சாபிண்டிய தோஷமில்லாதவளும், வயதில் கீழ்ப்பட்டவளும், ரோகமில்லாதவளும், உடன்பிறந்த சகோதரனுள்ளவளும், சமான ரிஷிகோத்ரமில்லாதவளுமே விவாஹத்திற்குரியவள்" என்றோர் ஸ்மிருதி வசனமிருக்கிறது. இதில் திருஷ்டதோஷமான ரோக முள்ளவளை விவாஹம் செய்துகொண்டால் திருஷ்டமாகவே அனேக தோஷங்கள் சம்பவிக்கின்றனவென்பது பிரத்தியக்ஷம். அதுபோல் அதிருஷ்டதோஷங்களுள்ளவர்களையும் விவாஹம் செய்துகொள்வது பாபமேயாகும். கீழ்க்குறித்த வசனத்தில் "முன்னெவனையும் அடையாதவள்" என்று காட்டியமையால் விதவாவிவாஹம் மறுக்கப்பட்டதென்றறிக. இது யுக்திக்கு மொத்ததே, விதவாவிவாஹம் செய்வதென்றாலது எவ்வளவுவயது வரையில் செய்யலாம்? 2-3-பிரஜைகளைப்பெற்றவளும் விதவையானல் அவளும் விவாஹம் செய்துகொள்ளலாமா? என்பதாதி ஆராய்ச்சி செய்வோமானல் அதற்கோர் முடிவு சொல்லமுடியாததாகவே தீரும். இவ்வளவு வயது வரையில்தான் விதவைகள் விவாஹம் செய்துகொள்ளலாம் என்று வரையறுக்கமுடியாது.

(தொடரும்) சங்கரன்.

---

# ஞானேபாயம்.

---

ஒருவனுவது நானில்லையென்று ஒருக்காலும் அறிவதில்லை என்பதனுல் எல்லோரும் தன்னை நான் நான் என்றே நிச்சயமாகத் தெரிந்துகொண்டே இருக்கிறர்கள். அவ்வளவு ஸ்பஷ்டமாக எல்லோர்களாலும நிச்சயமாக அறியப்பட்ட அஹமென்கிற ஆத்மாவின் வாஸ்தவஸ்வரூபம் எது என்று கொஞ்சம் விசாரிக்க ஆரம்பித்தால் அந்த ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம் பெரிய சாஸ்திரப்பிரவர்த்தகாளான மஹர்ஷிகளான மகாபண்டிதர்களுக்குக்கூட பெரிய மோஹத்தையுண்டுபண்ணும் விஷயமாகவே இருக்கிறது என்பதான பரமாச்சரியத்தை நமதுபரமாசாரியாளே "पण्डितानामप्येतन्महामोहस्थानं" என்பதாகச்சொல்லி அனேகவிடங்களில் கணுத கௌதம கபில ஜைமினி முதலான மஹாபண்டிதர்களான அனேக வாதிகளுடைய விப்ரதிபத்திகளை அதாவது ஸம்

சயங்களை பலவிதமாக காட்டியிருக்கிறார்கள். அதனால் அனேக வாதிகளுடைய ஸம்சயத்திற்கு விஷயமாகி அறியப்பட்டும் அறியப்படாமலுமிருக்கிற ஆத்மஸ்வரூபத்தை ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தால் தெரிந்துகொள்வோமென்பது சரியாகாது. ஏனெனில் ப்ரத்யக்ஷப்ரமாணத்தால் கண்டுகொள்ளக்கூடிய கொடம் வஸ்திரம் முதலிய ப்ரத்யக்ஷ வஸ்துக்களில் ஆஸ்திகநாஸ்திகவாதிகளெல்லோர்களும் மாறுதலில்லாமல் ஒரேவிதமாகவே ஒப்புக்கொண்டிருப்பதை நாமெல்லோரும் அநுபவிக்கிறோம். அது போல் ஆத்மவஸ்துவும் ப்ரத்யக்ஷத்தாலேயே அறியப்படுமானால் ஒருவிதமாகவே ஆத்மாவை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அவ்விதம் ஒருவிதமாகத்தீர்மானித்து ஒப்புக்கொள்ளவில்லை. இருக்கிறது என்று சிலர். இல்லையென்று சிலர். சரீரமே ஆத்மா என்று சிலர். சரீரமல்ல, பரலோக ஸம்பந்தியாக ஆத்மா வேறு என்று சிலர். கர்த்தா, அகர்த்தா, போக்தா, அபோக்தா, என்று இவ்விதம் பலவிதமாக ஆத்மவிஷயத்தில் ஸம்சயப்படுவதால் அதைப் ப்ரத்யக்ஷம் எப்படி நிச்சயமாகத் தெரிவிக்கும். ப்ரத்யக்ஷத்தை அநுஸரித்தே ப்ரமாணமாகும் அநுமானம் ஆத்மாவைத் தெரிவிக்காது என்பதில் ஸம்சயமே இல்லை. லோகத்தில் வஸ்துக்களைத் தெரிவிக்கும் ப்ரதானப்ரமாணங்கள் மூன்றே. ப்ரத்யக்ஷம், அநுமானம், சப்தம் என்று. இம்மூன்று ப்ரமாணங்களுள் முதலிரண்டு ப்ரமாணங்களான ப்ரத்யக்ஷம் அநுமானம் இந்த ப்ரமாணங்களால் தெரிந்துகொள்ளமுடியாத ஆத்மாவைத் தெரிந்துகொள்ளவோ, அந்த ஆத்மாவினுடைய பரலோகஸம்பந்தம். கர்திருத்துவம், போக்திருத்வம், ஏகத்துவம், அனேகத்துவம் முதலிய பலவித தர்மங்கள் உண்டு இல்லை என்பதையெல்லாம் தெரிந்துகொள்ளவோ வேதம் என்கிற உயர்ந்த முக்கிய ப்ரமாணத்தையே சரணமாக அடையவேண்டியதைத் தவிர வேறில்லை என்பது நிச்சயமே. அந்த வேதத்திலும் வேதப்ராமாண்ய வாதிகளான வைதிகர்களே ஒருவருக்கொருவர் த்வைதம் வேதார்த்தமா? விசிஷ்டாத்வைதம்வேதார்த்தமா? சுத்தாத்வைதம்வேதார்த்தமா? என்று மறுபடியும் விப்ரதிபத்தியை அடைவார்களேயானால் அந்தந்த மதாசார்யாளை அந்தந்த மதாபிமானிகள் பரமேசுவரனாகவே எண்ணி அந்த பரமேசுவரனுடைய அனுக்கிரஹத்தால் அவரவர்களுக்கு அந்தந்த மதவாஸனையுண்டாகி அந்தந்தமோக்ஷத்

தையடையவேண்டியதைத் தவிர வேறில்லை. ஆனால் எந்த வேதார்த்தம் பரமார்த்தம் என்று அவரவர்களுக்கு நிச்சயம் வரவேணுமென்றால் அப்படி நிச்சயம் வருவதற்கு உபாயம் எது என்பதை நன்றாய் ஆராய்ந்து பார்த்து தீர்மானிக்கவேண்டும். அப்படி வேதபரமார்த்தத்தை அறிய உபாயத்தைத் தேடும்போது பகவான் கீதையில் ஞானோபாயங்களை இவ்வளவு என்று கணக்கிட்டு நன்றாக உபதேசித்திருப்பதை கொஞ்சங்கூட மனதில் சிந்திக்காமல் வேறு எதாவது உபாயத்தைத் தேடினால் ஞானம் வருமா? வராது. ஆகையால் சுருதிகளிலும் கீதை முதலியவைகளிலும் ஞானோபாயமென்று உபதேசித்திருப்பதை யாவரும் அனுஷ்டித்து அஹம்மமாபிமானமில்லாமல் விசாரித்து உண்மையை அறிந்து யாவரும் சிரேயஸ்ஸை அடைவார்களாக. சுபம்.

சுப்பிரமணியன்.

## அத்வைதமதம் அவைதிகமதமா?

ஸ்ரீ உத்தராதி மடம் ஸ்வாமிகள் அத்வைதம் அவைதிகம் என்று ஸ்தாபிப்பதற்காக இந்தக் கும்பகோண நகரில் ஒரு ஸபை கூட்டியிருப்பதாக ஒரு பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஸ்வாமிகள் தாம் ஸபை கூட்டுவது தத்துவ விசாரம் செய்வதற்காக மாத்திரமேயன்றி வேறு யாதொரு எண்ணமும் கொண்டல்ல என்று அத்வைதிகளான சில லௌகிகப் பிரபுக்களிடத்தில் உறுதி கூறியதாகத் தெரிகிறது. இந்த இரு விஷயங்களும் ஒன்றுக்கொன்று பொருந்தாதிருக்கின்றன. அத்வைதிகளுக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கக்கூடியதான மேற்படி வெளியீட்டைக் கண்டு புண்பட்ட மனத்தினரான சிலர் 9—3—31-ல் ஸபையில் ஷை ஸ்வாமிகள் ஸன்னிதானத்தில் தங்களுடைய ஆழ்ந்த வருத்தத்தையும் ஆத்திரத்தையும் தெரிவிக்கவே ஸ்ரீஸ்வாமிகள் இவ்வாறு பதில் கூறினார்கள்.

“அவைதிகம் என்ற பதம் இவ்வளவு வருத்தத்தை உங்களுக்குக் கொடுத்திருப்பதாகவும், அதனுடைய அர்த்தம் இழிவாக நினைக்கப்படுவதாகவும் தோன்றுகிறது. அப்படி நாம் அந்த பதத்தை ஒருபொழுதும் உபயோகப்படுத்தினதில்லை. நாம் அத்வைதிகளை ஒருநாளும் அவைதிகர்கள் என்றோ வேதானுஷ்டானமில்லாதவர்கள் என்றோ சொல்லத்துணியோம். எங்கள்தேசத்தில்

இன்றுவரை அத்வைதிகளோடு எங்களுக்கு ஸம்பந்தம்உண்டு. அத்வைதிகளிடத்திலாவது அத்வைத மதத்திலாவது நமக்கு அவமதிப்பு கிடையாது. அத்வைதிகள் வேதத்தை ப்ரமாணமாகக் கொள்ளும் வைதிகர்களே. ஆகையாலல்லவோ நாம் உங்களோடு ச்ருதிமூலமாகவே விசாரம் நடத்திவருகிறோம்.

வேதத்தை ஒப்புக்கொள்ளாத வேதபாஹ்யர்களான சார்வாதிகளான அவைதிகர்களோடு வாதம் புரியும்போதோ தத்துவ விசாரம் செய்யும்போதோ கேவல யுக்திகளையல்லவா பேசவேண்டும். அவர்களிடம் ச்ருதியைச் சொல்வதுண்டோ? அத்வைதம் அவைதிகம் என்பதற்கு நாம் நினைத்துள்ள அர்த்தமாவது அத்வைதம் வேதத்தில் சொல்லப்படவில்லை என்பதுதான். அத்வைதிகள் அத்வைதத்தைச் சொல்வதாக நினைத்திருக்கும் உபநிஷத் வாக்கியங்களும் த்வைதத்தைத்தான் சொல்லுகின்றன என்பதுதான் நமது கருத்து. த்வைதம் அவைதிகம் என்று ஸ்ரீ சங்காராசாரிய ஸ்வாமிகளே எழுதியிருக்கவில்லையா, அத்வைதிகள், த்வைதம் வேதத்தில் சொல்லப்படவில்லை என்ற கருத்தால் த்வைதம் அவைதிகம் என்று சொல்வது எவ்வளவு நியாயமுள்ளதோ, அப்படித்தான் த்வைதிகள் அத்வைதம்அவைதிகம் என்று சொல்வதும் ஆகும். இதில் ஒருவரும் வருத்தப்பட நியாயமில்லையே. நீங்கள் ஆயிரந்தடவை "அவைதிகம் த்வைதம்" என்று சொல்லுங்கள். நமக்கு வருத்தமே கிடையாது. முடிந்தால் நாம் த்வைதம் வைதிகம் என்று வாதாடுவோம். முடிந்தவரை ஸ்தாபிப்போம். அபாரமார்த்திகபேதத்தை சொல்லுகின்றன உபநிஷத் வாக்யங்கள் என்று நீங்கள் சொன்னாலும் எங்களுடைய ஸத்தியமான பேதத்தை நீங்கள் ஒப்புக்கொண்டிருப்பதாக ஆகுமா? உபநிஷதங்களில் அபேதம் சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் அது உண்மையான அபேதமல்ல என்று நாங்கள் சொன்னால் நீங்கள் திருப்திப்படுவீர்களா?

ஆகையால் வேறுவிதமான அபிப்பிராயப்பட்டு வருத்தப்படக்கூடாது. நமது கருத்தை விளக்கிவிட்டோம். நாமெல்லோரும் சேர்ந்து தத்துவவிசாரமே செய்வோமாக.

இதைக்கேட்டதும் எல்லோரும் திருப்தியடைந்து ஸ்ரீ ஸ்வாமிகளுடைய ஸமரஸ உணர்ச்சியை மிகவும்புகழ்ந்து சென்றார்கள்.

பண்டிட் ஆர். வி. கிருஷ்ணமாசாரியார்.

---

குறிப்பு:- கீழ்க்காட்டியபடி ஸ்ரீஸ்வாமிகளவாள் ஸபையிலேயே சொன்னதோடு தனிமையில் முக்யமான சில பண்டிதர்களோடு நான் அவர்களை 10—3—31௳ தரிசனம் செய்த ஸமயத்திலும் அப்படியே தாம் ஆக்ஞாபித்ததாகவும் சொன்னார்கள். ப—ர்

# வார விருத்தாந்தம்.

மதம் பெரிது. நல்ல விஷயங்களை எந்தஜந்துவினிடமிருந்தும் கற்கலாமென பாகவதம் கூறுகிறது. தற்காலத்தில் தலைவராக நினைக்கப்படும் தேசாபிமானிகள் மகம்மதியர் கிருஸ்தவர் முதலியவர்களிடமிருந்தாவது மதாபிமானத்தைக் கற்றுணரவேண்டும். மஹம்மதலி ஓர் ஸமயம் முதலில் நான் மஹம்மதியன், பிறகு தான் இந்தியன் எனக் கூறினர். சென்ற செவ்வாய் சென்னை சட்டசபையில் மாப்பிளைமார் என்ற மலையாள மஹம்மதியரைப் பற்றி சட்டமெம்பர் பேசும்போது "கோபம் வந்தால் அவர்கள் மிருகங்களுக்கு சமம்" என்றாராம். தேசாபிமானத்திற் சிறந்த ஜனாப் யாகுப்ஹாஸன் என்ற மஹம்மதியர் குறுக்கிட்டு தம்மதத்தினை தூஷித்ததாகுமெனக்கூறி சட்டமெம்பரை தான் சொன்னதற்கு வருத்தம் தெரிவிக்கும்படி செய்தார். எத்துறையிலும் மதாபிமானத்தை விடாதிருப்போர் மதிக்கத்தக்கவரன்றோ?

நமக்குள்ளே தீர்த்துக்கொள்வது நலம். மாயவரத்தைச்சார்ந்த அப்புராஜபுரத்தில் ஓர் விப்ரவிதவையை மூன்று விப்ரர்கள் கூடி எக்காரணம்பற்றியோ சாணியைக் கரைத்துக்கொட்டி வஸ்திராபஹரணம் செய்து மானபங்கம் செய்ததாக நீதிஸ்தலத்தில் வியாஜ்யம் தொடுத்து மூவரும் அபராதம் விதிக்கப்பட்டனர். இத்தீயச்செயலைச் செய்தவர் சிக்ஷிக்கத்தக்கவரே. அவள் குற்றம் யாதோ அறியோம். யாதாயினும் இதுபோன்ற விஷயங்கள் கோர்ட்டுக்கு வந்து பத்திரிகையிலடிபடுவதும் மானக்கேடான விஷயம். இருபாலரும் ஒப்பி உள்ளூர் பஞ்சாயத்தில் தீர்த்துக்கொள்வது நலம். பிறர் நகைக்க இடமளிக்கலாமோ? கிராமங்களில் வாவா ஸதுபதேசமற்றுவிட்டது. ஏதாவது நல்ல காலக்ஷேபத்திற்கிடமிருந்தால் இவைகள் குறையலாம்.

தன் வினை தன்னைச் சுடும். மதுரை மேலூரில் செட்டி வகுப்பைச்சார்ந்த ஒருவர் இறந்த தன் தமயன் பெண்ணுக்குத் தான் கார்டியனாகவேண்டுமெனக் கோறி 11-வயதில் அப்பெண்ணுக்கு சாரதாசட்டத்திற்கு விரோதமாக கல்யாணம் நடப்பதைத் தடுக்க அரசாங்கத்தை அடைக்கலம் புகுந்தார். அவ்விவாஹம் நடவாமல் நின்றுவிட்டது. ஆனால் ஸ்வகார்யத்திற்காக சாரதா சட்டம் கெட்டுவிடுகிறதே என்று மாயக்கண்ணீர் விட்ட செட்டி

யாரைவிட்டு பெண்ணின் தாயே கார்டியனுக்கப்பட்டாள். கலியிலும் கைமேல் கூலி கிடைத்தது.

**செத்த பாம்பு.** காந்தி இர்வின்ராஜி ஒருவகையாகப் பூர்த்தியானது. அதைக் குறிக்கும் டில்லி நிரூபர் இனி உப்புக் காய்ச்சுவோர் சாரதாசட்டத்தை மீறியவர்போல் அரசாங்கத்தால் சிக்ஷிக்கப்படமாட்டார் என்கிறார். நமது பரமாசார்யாளது பரமாநுக்ரஹத்தால் அச்சட்டஸர்ப்பம் அன்றே இறந்துவிட்டது. ஆயினும் புத்தகத்திலுள்ளவரை செத்தபாம்பைப்போல் பயமுறுத்திவருகிறது. அதையுமகற்ற தக்க முயற்சி செய்யவேண்டும். நாற்றம் அகலவேண்டும்.

**மஹாபாபம்** சிலர் சில காரணங்களைக்கொண்டு மணந்த மனைவியை விட்டு மற்றொருத்தியை மணம் புரிகின்றனர். மூத்தவள் விடும்கண்ணீர் எவ்வளவு புழுதிகளை நனைக்கிறதோ அத்தனை ஆண்டு நரகத்தை அநுபவிப்பரென சாஸ்திரங் கூறுகிறது. அவளது சாரித்ரம் கெட்டு ஜீவனாம்சத்திற்கு அவள் வழக்கு தொடர்வதுபோன்றவை, நமது ஸமூஹத்தைச் சீர்குலைக்கும். திருநெல்வேலியில் ஒரு மனைவி பர்த்தா என்பவன் பர்த்தாவாகவில்லை. ஜீவனாம்சம் வேண்டுமென வழக்குத் தொடுத்திருக்கிறாள். ஊரார் பெரியோர் இதை ஸமாஸப்படுத்தவேண்டும். புருஷர்களும் பெண்ணிருக்கும்போது பெண்ணைக்கொடுப்பவரும் தர்மத்தை கவனிக்க வேண்டும்.

**தந்தையையொத்த மைந்தன்.** ப்ரபஸர் சுந்தராமய்யரை அறியாத ஆஸ்திகரிரார்.கல்வியிலும் குணத்திலும் அவரையொத்த மைந்தன் ஜட்ஜ் பிரும்மஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமிசாஸ்திரிகள் 8வ மதுரையில் புருஷகாரம்என ஓர் உபந்யாஸம் செய்தார். இவர் தக்கபடி கற்றோராதலின் சென்றவிடமெல்லாம் சிறப்பாக தர்மோபதேசம் செய்கிறார், மற்ற ஆஸ்திக உத்யோகஸ்தர் இவரை மேற்கோளாகக் கொள்வரோ?

**உண்மைமதாபிமானிக்குப் பகைமையில்லை.** பெங்களூரில் கிருஸ்தவப்பெண்கள் நமது குழந்தைகளை அவமதித்தவிஷயமாக நடந்த கண்டனக்கூட்டத்தில் ஓர் குருவப்பா எனும் கிருஸ்தவர் பாதிரிமார்கள் செயலால் ஏசுவின் பரிசுத்தநாமத்திற்கே பங்கம் வருமெனவற்புறுத்தினர். அவரவர்மதத்திலும்உண்மைஉண்டென

உண்மைமதாபிமானி எண்ணுவான். மற்றயோர் மார்தட்டிப் பிறரைச் சண்டைக்கிழுப்பர்.

ரத்த எருவா? சீமையில் அநுஷ்டிப்பதுபோல ஆடுமாடுகளின் ரத்தத்தைக் காய்ச்சி பெங்களூரில் எரு விடுவதாயும் இதை நாம் கைக்கொள்ளவேண்டுமென ஓர் வக்கீல் உபதேசிக்கிறார். நரர் மலத்தால் பயிராகும் கரிகாய்களைத் தின்போர் பல வியாதிக்காளாகின்றனரென கூறப்படுகிறது. ரக்தம்போன்றவை சரீரசுகத்தைக் கெடுப்பதோடில்லாமல் மநதையுங் கெடுக்குமென்பதை மறக்கலாகாது.

செல்லாத காசு. சுயமரியாதை எனும் பெயரால் நாஸ்திகம் தாண்டவமாடிவருகிறது. சென்றவாரம் சிலரிதைப் பாண்டியில் செலாமணியாக்க அழைத்தனர். ஆஸ்திகரனைவரும் இவ்வடாத செயலைச் சட்டரீதியாக ஓர் மூலையில் ஒடிக்கி ஒரு நாளுடன் ஊரைவிட்டு விரட்டினர். பொதுஜநங்கள் ஊக்கங்கொண்டால் இச்செல்லாத காசை உருக்கிப்புதிதாக வார்க்க அதிகநாளாகாது.

ப்ரஷ்டனுக்கு வேறு கதி என்ன? மாம்ஸமுண்ணும் சன்யாஸியை இது தகுமா என ஒருவர் கேட்க, மத்யம் தாஸீகமநம் இவைகளும் உண்டென தெரிவித்தாராம்? இதற்கு பணமேதென சூது திருடல் இதால் ஸம்பாதிப்பதாகவும் ப்ரஷ்டனுக்கு வேறு என்ன கதி என்றார் என ஓர் கதையுண்டு. குதிரைப்பந்தயம் ரங்காட்டம் இவைகளில் பணத்தைப் பாழாக்கி பல குடும்பங்கள் அழிகின்றன. இதற்கு அவச்யமாக பணம் வேண்டியிருப்பதால் யாதாமொரு துர்மார்க்கம் பணம்பெற கைப்பற்றவேண்டியதாகிறது. சென்றவாரம் கிண்டி குதிரைப்பந்தயத்தில் ஒருவர் அருகிலுள்ளவர் கடியாரத்தைக் களவாடி பிடிபட்டார். சூதாட்டம் தவறென பாண்டவர் சரிதம் கூறுகிறது. இத்தீயவழக்கத்தை விட்டு நல்வழி வருவரோ?

பெயருக்கேற்ற பெரியார். பெரியாரது பெயரே அவர் குணத்தை விளக்கும். காந்திஇர்வின்ராஜியை உத்தேசித்து விஜயநகரத்தில் பாரசிபூஷணம் என்ற பெரியார் 10000 சேலைகளை ஜநங்களுக்கு வழங்குகிறாராம். அர்த்தமில்லாது ஓர் வளைவைக்கட்டாமல் நல்ல வேலை செய்கிறார். நல்ல தர்மம்! நல்ல பெயர்!!

ஸ்ரீவத்ஸ வெ சோமதேவ சர்மா.

---